மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை.
முன்னிலை: திரு.செ.பி.பர்வத்ராஜ் ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2024–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02–ம் நாள் வெள்ளிக்கிழமை.

<u>இடைநிலை மனு எண்.3/2023</u>

<u>இன்</u>

<u>அசல் வழக்கு எண்.904/2019</u>

1. ரஹ்மத்பீ
2. காதர் உசேன் ....மனுதாரர்கள்/1, 3 பிரதிவாதிகள்

/எதிர்/

முஸ்திரிபேகம் ....எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு 06.01.2024ம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள்/1, 3 பிரதிவாதிகள் தரப்பில் திரு. R. வாசுதேவன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. P. சிவசங்கரன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரையிலும் என் முன்பு ஆய்வில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

<u>உத்தரவு</u>

இம்மனுவானது மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7–ன் கீழ், மனுதார்கள்/ 1ம் பிரதிவாதிக்கு எதிராக 30.11.2020லும், 3ம் பிரதிவாதிக்கு எதிராக 09.08.2019லும் ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>2. மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர்/1ம் பிரதிவாதி தனக்காகவும், 3ம் பிரதிவாதிக்காகவும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எதிர்மனுதார்/ வாதி தங்கள் பெயரில் தாவா சொத்து பொருத்து அசல் வழக்கில் நிரந்தர தடையுத்தரவு கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா கடந்த 30.11.2020ம் தேதி போடப்பட்டிருந்தது என்றும், தனக்கு அன்றைய தேதியில் எதிர்வழக்கரை தாக்கல் செய்யாததால் மேற்கண்ட வழக்கில் தங்களுக்கு எதிராக 30.11.2020ல் எக்ஸ்பார்ட்டி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது

என்றும், இந்த விவரம் தனது வழக்கறிஞர் மூலம் தெரியவந்தது என்றும், வழக்கறிஞரை சந்தித்த உடனே இம்மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே மேற்படி வழக்கில் மனுதாரர்கள்/1,3 ம் பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து தாங்கள் தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை ஏற்க வேண்டும் என்றும், இல்லாவிடில் தங்களுக்கு பெருத்த கஷ்டமும் நஷ்டமும் ஏற்படும் என்றும், எனவே கடந்த 30.11.2020 ம் தேதியன்று தங்களுக்கு பிறப்பித்த ஒருதலைடப்ச உத்தரவை ரத்து செய்து எதிர்உரையை ஏற்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) <u>எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர்/1,3 ம் பிரதிவாதிகள் தரப்பு மனுவில் கூறியுள்ள காரணங்களை மறுத்தும், மேற்கண்ட வழக்கில் நோட்டீஸ் மற்றும் சம்மன் கிடைத்த பிறகு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்கள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகினார்கள் என்றும், மேலும் அவர்கள் எழுத்துப்பூர்வ அறிக்கையை தாக்கல் செய்வதற்கு அதிக நேரம் எடுத்துக் கொண்டதாகவும், எனவே மனுதாரர்கள் / பிரதிவாதிகள் 30.11.2020 அன்று தங்கள் தரப்புக்கு எழுத்துப்பூர்வ அறிக்கை எதுவும் தாக்கல் செய்யாததால் எக்ஸ்பார்ட்டி உத்தரவு ஏற்பட்டது எனறும், மனுதாரர் தரப்பு எக்ஸ்பார்ட்டி விசாரணைக்காக வழக்கு பதிவு செய்யப்பட்ட பிறகு, மனுதாரர்கள்/1 மற்றும் 3 பிரதிவாதிகள் தற்போது மனுவை தள்ளுபடி செய்ய மனு தாக்கல் செய்தனர் என்றும், எனவே எக்ஸ்பார்ட்டி ஆர்டரை ஒதுக்கி வைப்பதற்குக் கூறப்பட்டுள்ள காரணங்கள் நம்ப முடியாதவை என்றும், எனவே வழக்கை நடத்துவதில் மனுதாரர்கள்/1 மற்றும் 3 பிரதிவாதிகளின் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியங்கள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில்,

" மனுதாரர் கோரியபடி மனுவை அனுமதிக்க வேண்டுமா? என்பதேயாகும்".

<u>6. தீர்வு</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 3 பிரதிவாதிகள் என்பதும், 30.11.2020 ம் தேதியில் நீதிமன்றத்தில் அழைத்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் அசல் வழக்கின் 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளதும், 09.08.2019 ம்

தேதியில் 3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக உத்தரவிடப்பட்டுள்ளதும், வழக்கு கட்டினை பரிசீலிக்கையில் தெரியவருகிறது. மனுவில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் கூறியுள்ள காரணமான எனது வழக்கறிஞரை சந்திப்பதில் காலதாமதம் ஏற்பட்டுவிட்டது என்றும், இவ்வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாமல் போய்விட்டது என்றும், அதனால் நீதிமன்றத்தில் மேற்படி தேதியில் ஆஜராக முடியவில்லை என்றும் கூறியுள்ள காரணத்தை மறுத்து எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் மேற்கண்ட வழக்கில் நோட்டீஸ் மற்றும் சம்மன் கிடைத்த பிறகு மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தங்கள் வழக்கறிஞர் மூலம் ஆஜராகினார்கள் என்றும், மேலும் அவர்கள் எதிர் வழக்குரை தாக்கல் செய்யாததால் 30.11.2020ம் தேதி மனுதாரர்கள் / பிரதிவாதிகளுக்கு எதிராக எக்ஸ்பார்ட்டி உத்தரவு பிறபிக்கப்பட்டது என்றும், தற்போது மனுவில் கூறியுள்ள காரணம் ஏற்கத்தக்கதல்ல என்று எதிருரை தாக்கல் செய்துள்ளதையும் ஆராய்கையில், 1, 3ம் மனுதாரர்கள் அசல் வழக்கில் ஏன் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை, எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதற்கான தகுந்த காரணங்களை மனுவில் கூறப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் கருதியும் எனவே மனுவில் கூறிய காரணம் முழுமையாக ஏற்கத்தக்கது இல்லை என்றாலும், மனுதாரர்கள் தங்களது கட்சியை எடுத்துரைக்க ஒரு வாய்ப்பு அளிப்பது நீதியின் பொருட்டு நலம் என்று கருதியும், மனுவை தள்ளுபடி செய்ய எதிர்மனுதாரர் தரப்பில் போதிய காரணம் கூறாத நிலையிலும், இருப்பினும் எதிர்மனுதாரருக்கு காலதாமதத்தின் மூலம் ஏற்பட்டிருக்கும் இழப்பீட்டை சரிசெய்யும் வகையில் கீழ்க்கண்ட நிபந்தனைகளை நிறைவேற்றும் பட்சத்தில் மனு அனுமதிக்கப்பட்டும் எந்த ஒரு நிபந்தனைகளையாவது மனுதாரர்கள் மீறும் பட்சத்தில் இம்மனு தானாக தள்ளுபடி செய்யப்பட்டதாக உத்தரவிடப்படுகிறது.

மனுதாரர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன.

1. மனுதாரர்கள் அடுத்த வாய்தா தேதியில் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/– காலதமத்தினால் ஏற்படும் இழப்பீட்டை சரிசெய்யும் வகையில் செலுத்தி அதற்குண்டான மெமோவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.

2. மனுதாரர் அசல் வழக்கினை காலம் தாழ்தாமல் தேவையற்ற வாய்தா பெறாமலும் வழக்கின் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டும்.

உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லச்சொல்ல அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 02-ம் நாள் கையொப்பம் இடப்பட்டு அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- செ.பி. பர்வத்ராஜ் ஆறுமுகம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

<u>இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

ஒம்/- செ.பி. பர்வத்ராஜ் ஆறுமுகம்
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.